**DEPOSITION OF WITNESS ON VC**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | CC 280 of 2019 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | திவ்யா |
| Husband Name | : | பழனிச்சாமி |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 18.06.2025.

Both accused absent

PW1 present through VC from e-seva kendhra Devakottai

Remote site e-seva kendra co-ordinator - Tmt. C. Karpagam

<u>சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் செங்கப்பள்ளியில் வாடகை வீட்டில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். அந்த வீட்டிலிருந்து நான் நடத்தி வந்த காரைக்குடி மெஸ் அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் ஒரு கிலோ மீட்டருக்கு உள்ளாக இருக்கும். வாடகை வீட்டில் என்னுடன் யார் யார் வசித்து வந்தார்கள் என்றால் எனது கணவர் மற்றும் மகன் மாதேஸ்வரன் வசித்து வந்தார்கள். நாங்கள் பொதுவாக எனது ஹோட்டலுக்கு காலையில் எப்போது சென்று விட்டு எத்தனை மணிக்கு இரவு வீடு திரும்பும் என்றால் காலை 6.30 மணிக்கு ஹோட்டலுக்கு வந்து விட்டு இரவு உணவகத்திலேயே தங்கி விடுவது வழக்கம், எப்போதாவது தான் இரவு வீட்டுக்கு வருவேன். நான் இந்த விவரத்தை எனது முதல் விசாரணையிலோ மற்றும் போலீஸ் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி

காரைக்குடி மெஸ் கிழமேல் பைபாஸ் சாலைக்கு வட புறமாக உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி மெஸுக்கு கிழபுரம் மற்றும் வடபுறம் காலியிடம் உள்ளது என்றாலும் 5 அடி இடைவெளி விட்டு கம்பி வேலி போடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். எங்களது ஹோட்டல் கட்டிடத்திற்கு உரிமையாளர் பெரியசாமி என்கின்ற கன்னக்குட்டி என்றால் சரிதான் . அந்த ஹோட்டலில் முன்புற பகுதி நான்கு டேபிள் கொண்ட சாப்பிடும் பகுதி என்றாலும் பின்புறப் பகுதியில் சமையல் கூடம் அமைந்துள்ளது என்றாலும் சரிதான். மேற்படி மெஸ்க்கு வரும் வாடிக்கையாளர்கள் மற்றும் வேலை செய்பவர்கள் பயன்பாட்டிற்காக மெசின் பின்பகுதியில் மேற்புறம் கழிவறை உள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி கழிவறை இரும்பு டோர் கொண்டது அதன் மேல் பகுதியில் இடைவெளி எதுவும் இல்லை என்றால் சரியல்ல, இடைவெளி இருக்கும். இந்த வழக்கின் எதிரிகளான கோவிந்தசாமி மற்றும் ஜமுனா ராணி என்பவர்கள் முருக பவன் என்ற உணவகம் நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி முருக பவன் எங்க கடைக்கு பின்னால் அமைந்துள்ளது என்றால் சரிதான். அதற்கு செல்வதற்கு கம்பி வேலியை ஒட்டி கிழபுரமாக நடந்து வந்து பின்புறம் செல்ல வேண்டுமென்றால் சரிதான். எனது ஹோட்டலில் இரவு நேரத்தில் வேலை செய்யும் ஆட்கள் யாரும் தங்குவதில்லை என்றால் சரியல்ல, இருவர் தங்குவார்கள் ஆனால் அவர்கள் பெயர் தற்போது ஞாபகம் இல்லை, அவ்வப்போது நாங்களும் தங்குவோம். நான் இந்த விவரத்தை எனது முதல் விசாரணையிலோ மற்றும் போலீஸ் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. எங்களது மெஸுக்கு சமையலறைக்கு கிழபுறம் குழி தோண்டப்பட்டு அதில்தான் கழிவு நீர்கள் தேக்கி வைக்கப்பட்டிருந்தது

என்றாலும் பஞ்சாயத்து மூலமாக தனியாக எந்த ஒரு கழிவு நீர் வசதியும் செய்யப்படவில்லை என்றாலும் சரிதான். அந்தக் கழிவு நீர் அந்தக் குழியில் இருந்து நிரம்பி அடிக்கடி அருகே எதிரியின் உணவகத்திற்கு செல்லும் வழியில் வருவதால் பிரச்சினை இருந்து வந்தது என்றால் அவ்வாறு இல்லை. அவ்வாறு கழிவு நீர் செல்வதால் எனக்கும் எதிரிக்கும் இடையே பிரச்சனை இருந்து வந்தது என்றாலும் நான் தற்போது அதனை மறைத்து பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

5. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியிலும் அவ்வாறு கழிவு நீர் வழியில் வந்தது என்றாலும் அதனை கேட்க வந்த ஜமுனா ராணியை நானும் எனது மனைவியும், கடையின் உரிமையாளர் பெரியசாமியும் சேர்ந்து ஜமுனா ராணியை தாக்கினோம் என்றால் சரியல்ல. அதற்கு பின்னிட்டு அவரது கணவர் அதனை தடுத்த முற்பட்டபோது நாங்கள் அவரையும் கட்டையால் தாக்கினோம் என்றால் சரியல்ல. ஜமுனா ராணி எங்கள் மீது கொடுத்த புகாரின் பேரில் ஊத்துக்குளி காவல் நிலையத்தில் குற்ற எண் 285 - 2018 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

6. அந்த வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டிய நான், எனது மனைவி, பெரியசாமி ஆகியோர் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சி அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் அந்த இடத்தில் பாத்ரூம் கிடையாது என்றாலும் கழிவறை மட்டுமே உள்ளது என்றாலும் அதனை நான் சொல்லும் விதத்தில் பார்க்க வாய்ப்பு இல்லை என்றாலும் சரியல்ல. நான் எனது போலிஸ் விசாரணையிலோ, முதல் விசாரணையிலும் பாத்ரூமின் நீளம் அகலம், கதவு ஜன்னல் உள்ளிட்ட விவரங்கள், எவ்வாறு அதில் பார்க்க முடியும் என்பதை பற்றியும் கூறவில்லை என்றால் சரிதான். புகாரில் உள்ள

விவரங்கள் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் நான் அரசு மருத்துவமனையில் இருந்தபோது அங்கு வந்த போலீசாரிடம் நானும் எனது கணவரும் சொன்ன விவரத்தை எழுதி கையெழுத்து வாங்கினார்கள்.

7. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது என்னை அடித்ததாக சொல்லப்படும் நபரின் பெயர் மற்றும் முகவரியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, மருத்துவரிடம் கூறியுள்ளேன். நான் புகாரில் கழிவறைக்கு முன்பு சம்பவம் நடந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் கடைக்கு முன்னதாக நடந்ததாக சொல்லி உள்ளேன். முதல் விசாரணையில் நான் கூறியுள்ளது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றாலும் எதிரிகள் குற்றவாளி இல்லை என்றாலும் சரியல்ல.

திமன்றத்தில் சாட்சி காணொளி வாயிலாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

DHARANEETHER B

Digitally signed by DHARANEETHER B
Date: 2025.07.11 13:51:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.